# சுவர்க்க வாசல்

**(கஸ்தூரி ஸ்ரீனிவாசன்)**

பாத்திரங்கள் : குருக்கள் சுவாமிகள்

மளிகைக்கடை மாணிக்கம்

சித்திர குப்தன்

துரைசாமி

நீலாம்பாள்

மைனர் சுந்தரம்

இந்திரா

இடம் : சுவர்க்க வாசல்

காலம் : தற்காலம்

(சுற்றிலும் மேகங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. ஒரு மேடையும், அதன் பின்னால் படிகளும், இரண்டு பெரிய கதவுகளும் தெரிகின்றன. மேடையின் இடது பக்கம் ஒரு மேஜை, நாற்காலி, நாற்காலியில் ஒருவர் வேஷ்டி, கோட், உருமாலை, மூக்குக் கண்ணாடி சகிதம் உட்கார்ந்துகொண்டு தமக்கு முன்னால் இருக்கும் நூதன கருவியை கொஞ்சம் சந்தேகத்தோடு பார்த்துக்கொண்டு இருக்கிறார். மேடையில் வலது பக்கம் குருக்கள் சுவாமிகளும் மாணிக்கமும் சந்திக்கிறார்கள்.)

சுவாமிகள்: என்ன ஒரே அந்தகாரமாயிருக்கே. எங்கிருக்கிறேன்னே தெரியலையே? இப்பதான் ரெண்டு நிமிஷத்துக்கு முன்னே ஏதோ வயறு வலிக்குதேன்னு கொஞ்சம் படுத்தேன். மாணிக்கம் போனதுக்காக நடந்த சமாராதனைச் சாப்பாடு உடம்புக்குச் சேரலைப் போல இருக்கு. சம்சாரம் சுக்குக் கஷாயம் போட்டுண்டு வரேன்னு சமையல் உள்ளுக்குப் போனா, என்னமோ பிரமாதமா வலிச்சது. ஆனால் இப்போ வலி ஒண்ணும் கிடையாது. சுக்குக் கஷாயம் வேண்டாம் வேண்டாமென்று பத்துத்தடவை கத்தினேன். ஆனால் அவளை இன்னும் காணமே? பக்கத்து வீட்டுப் பெண்ணோட ஏதாவது கதை அளந்துட்டிருப்பாள்.

மாணிக்கம்: அட சாமிகளே, நீங்களா? உங்களுக்குத்தானே நான் சாகிறதுக்கு முன்னே கோதானம், பூதானம், சுவர்ண தானம் என்று என்னென்னமோ கொடுத்துட்டு வந்தேன்; அதை வெச்சி அனுபவிக்கக்கூட உங்களுக்கு அதிஷ்டமில்லாமப்போச்சே. நீங்களும் எனக்குப் பின்னாலெயே புறப்பட்டு வந்துட்டீங்களே?

சுவாமிகள்: யாரு, நம்ம மளிகைக் கடை மாணிக்கமா? அப்பொ நானும் செத்துத்தான் போயிட்டேன் போல இருக்கு. கிள்ளினால் கூட வலிக்கலையே. அட பரமசிவா! இதென்ன மாணிக்கம், உங்க பதிமூனாம் நாள் வைகுண்ட சமாராதனை சாப்பாடுதான் என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டது. உங்க வாடிக்கைக்காரர்களுக்கு விற்கும் கலப்பட சாமான்கள்தான் உங்க சமாராதனைக்கும் உபயோகம் போல் இருக்குது.

மாணிக்கம்: பரவாயில்லை சாமி. கீழ் உலகத்துலெ சம்சார சாகரத்துலெ அவதிப்படுவதை விட சுவர்க்கத்துலெ சிரஞ்சீவியா இருக்கிறது நல்லது என்று எத்தனை தடவை நீங்க சொல்லியிருக்கரீங்க. அதனாலெதான் நானும் உங்களை கூடவே கூட்டியிட்டு வந்துட்டேன் போல இருக்குது (சிரிக்கிறார்).

குருக்கள்: நீங்கள் சொல்வதும் ஒரு விதத்துல சரிதான். ஆனால்....... நாம் இப்போ எங்கே இருக்கிறோம்? இதென்ன சுவர்க்கமா......... அல்லது நரகமா? ஒண்ணுமே தெரியலையே.

மாணிக்கம்: ஏதாயிருந்தாலும் பரவாயில்லை. என் சம்சாரம் இங்கே வராமெ இருந்தால் அதே எனக்கு சுவர்க்கம் மாதிரிதான். ஆனால் நீங்கதான் கெட்டிக்காரர், சாமி. என்னென்னமோ சொல்லி ஏமாத்திப் பணம் வாங்கிப் போட்டீங்க. இங்கே ஒண்ணும் நீங்க சொன்ன மாதிரி இல்லை. அதோ அங்கே உட்காந்துக்கிட்டிருக்கிறாரே அவரைக் கேட்டுப் பார்க்கலாம்: வாங்க.

(இருவரும் உட்கார்ந்திருக்கும் சித்ரகுப்தனிடம் போகிறார்கள்)

சித்ர: உங்களுடைய பெயர் என்ன?

மாணிக்கம்: நீங்க யாருங்க? என்னுடையகொள்கை என்னண்ணா, ஒருத்தருடைய ஊரு, பேரு தெரியாமெ, அவரோட பிசினெஸ் செய்யரதில்லை.

சித்ர: என்னைப் பார்த்தால் யார் மாதிரி இருக்கிறது?

மாணிக்கம்: ஹைஸ்கூல் வாத்தியாராக இருக்கலாம்; அல்லது கலெக்டர் ஆபிஸ் குமாஸ்தாவாக இருக்கலாம். ஆனா இந்தக் காலத்துலெ அவுங்ககூட நீளமா தலை முடியை வளத்திட்டு வீதியை கூட்டரமாதிரி ட்ரௌசர் போட்டுக்கராங்க. நீங்க இங்கே என்ன செய்யரீங்க?

சித்ர: கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறேன்.

சுவாமிகள்: சித்திரகுப்தனா? பிரபு! தங்களுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள்.

(அவர் காலைத் தொட்டு கும்பிடுகிறார்)

மாணிக்கம்: (கொஞ்சம் சந்தேகத்துடன்) உங்க கணக்கு புஸ்தகம் எல்லாம் எங்கீங்கோ. பேரேடு, குறிப்பேடு இருக்கனும். அப்புறம், இன்கம் டேக்சுக்கும், சேல்ஸ் டேக்சுக்கும், கூட்டாளிகளுக்கு காட்ரதுக்கும் தனிக் கணக்கு தேவை.

சித்ர: எல்லாம் இருந்தது. ஆனால் இப்போது இந்த கருவி எல்லா வேலையும் செய்கிறது. உலக ஜனத்தொகை ஆயிரம் கோடிக்கு மேலேபோன உடனே எல்லாம் கம்யூட்டர்லெ செய்யவேனும் என்று மேல் அதிகாரிகள் முடிவு செய்தார்கள்.

மாணிக்கம்: இது என்ன கம்ப்யூட்டருங்கொ? (கருவியை கவனித்துப் பார்க்கிறார்) இது என்ன பாஷை உபயோகப்படுத்துது? ப்போட்ரணா அல்லது வேறு பாஷையா?

சித்ர: அதெல்லாம் எனக்குத் தெரியாது. இங்கே வந்த ஜப்பானியர்கள் இதை நிறுவியிருக்கிறார்கள். நான் இந்த பொத்தானை அழுத்தினால் போதும். யாரைப் பற்றி என்ன வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளலாம்.

மாணிக்கம்: நானும் ஒரு கம்ப்யூட்டர் வெச்சிருந்தேன். ஆனால் அதுலெ ஒரு பெரிய குறைபாடு. ஒரு இன்கம் டேக்ஸ் ஆபீசர் வந்து பொத்தானை அழுத்தினால் நம்ம ரகசியம் எல்லாம் அம்பலம்தான்.

சித்ர: எனக்கு அந்தப் பிரச்சனை இல்லை.

மாணிக்கம்: என்னாங்க இந்த கம்ப்யூட்டர் வாங்கினதுனால ரொம்ப பேருக்கு வேலை போயிருக்குமே?

சித்ர: இல்லை. முன்னேயும் நான் ஒருவன்தான் இருந்தேன். இப்போதும் நான் ஒருவன்தான் இருக்கிறேன்.

மாணிக்கம்: இந்த கம்ப்யூட்டருக்கு வேலை கொடுத்துட்டு உங்களுக்கும் சம்பளம் கொடுக்கறாங்களே. உங்க மேல் அதிகாரிகளை ஒரு மேனேஜ்மெண்ட் டிரெய்னிங் புரோகிராமுக்கு அனுப்போனுமுங்க.

சித்ர: நான் இப்போது, ஒரு பொது உறவு வேலை செய்து வருகிறேன்.

மாணிக்கம்: அப்போ நீங்க ரொம்ப கெட்டிக்காரர்தான். எம் பேரு மாணிக்கமுங்கொ. மளிகை வியாபாரம். பெரட்டுப் பித்தலாட்டம் நம்ம கடையிலெ மருந்துக்கு கூடக் கிடையாதுங்கொ. என்னுடைய நாணயம், நம்பிக்கையைப் பற்றி எங்க ஊருலெ யாரை வேணுமானாலும் கேட்டுப் பாருங்கொ. கலப்படம் செங்சாலும் சுத்தமான சாமான்களைத்தான் உபயோகப்படுத்தினேன்….. உங்க பெயர் என்னங்க?

சித்ர: நான்தான் சித்ரகுப்தன்.

மாணிக்கம்: ஓஹோ? அப்படியா? உங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். கணக்கு வைத்திருப்பவர்கள் எல்லாருக்குமே நீங்கள் ஒரு உதாரணம். நீங்க நமக்கு ஒரு உதவி செய்தா அதை நான் எப்போதும் மறக்கமாட்டேன். ஆனா இது எந்த ஊருன்னு தெரியலெ. சுவர்க்கமோ, கைலாசமா அல்லது….. அந்த இடமா? சொன்னா மனசுக்கு கொஞ்சம் நிம்மதியாய் இருக்கும்.

சுவாமிகள்: என் பெயர் குருக்கள் சுவாமிகள். ஆயுள் பூராவும் சாமி கோயில் பூசைதான். புராணங்கள், ஆகமங்கள் எல்லாம் கரெச்சி குடிச்சிருக்கிறேன். வருடாவருடம் மாதம் மும்மாரி மழை பெய்வதற்காக வருண பகவானுக்கு யாகம் செய்திருக்கிறேன்.

மாணிக்கம்: அதனாலெதான் மழையில்லாமெ உலகத்துலெ ஜனங்க கஷ்டப்படறாங்க.

சுவாமிகள்: தாங்கள் இங்கே இருந்தால் இது சுவர்க்கம் அல்லது கைலாசம் அல்லது தெய்வலோகமாகத்தான் இருக்க வேண்டும். நான் எங்கே போகப் போகிறேன் என்கிறதையும் கொஞ்சம் தயவு பண்ணி சொல்லிவிடனும்.

சித்ர: உங்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க என்னால் முடியாது. யுத்தங்கள் உள்நாட்டுப் போர்கள், புரட்சிகள், பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து என் வேலைப்பழுவை அதிகப்படுத்திவிட்டன. அதோ அப்படிகளை ஏறி கதவுகளைத் திறந்து கொண்டு போனால் உங்களுக்கே தெரியும்.

மாணிக்கம்: என்ன இப்படி ஒரேயடியாச் சொல்லிட்டீங்களே. பொது மக்கள் உறவுண்ணு சொன்னால் கேள்விகளுக்காவது பதில் சொல்ல வேண்டாமா? (சுவாமிகளைப் பார்த்து) உங்களுக்குக் கொடுத்த காணிக்கையெல்லாம் தண்டந்தான் போலெ இருக்குது. ஏதோ இவருக்குப் பூசை பண்ணியிருந்தாலாவது சீக்கிரம் விஷயத்தெச் சொல்லியிருப்பாரு.

சுவாமிகள்: (சித்ர குப்தனைப் பார்த்து) தேவரீர் தாங்கள்தான் என் பாபங்களையெல்லாம் மன்னிக்கனும். ஏதோ தெரிஞ்சும் தெரியாமலும் எவ்வளவோ செய்திருப்பேன். அதையெல்லாம் மறந்துட்டு சொர்க்கத்துக்குப் போகிற மாதிரி ஏற்பாடு செய்யனும். (சித்ரகுப்தர் காலில் விழுகிறார்).

சித்ர: எழுந்திரும், அப்படிகளை ஏறிச் சென்றால் உமக்கு எங்கு போக இஷ்டமோ அங்கு போகலாம். நான் உங்களுக்கு உதவி செய்ய ஆசைப்பட்டாலும் கம்ப்யூட்டரில் திருத்தல், மருத்தல் ஒன்றும் முடியாது.

மாணிக்கம்: அவர் சொல்றதும் சரிதான். சேல்ஸ் டேக்ஸ் ஆபீசர்கள் சோதனை செய்ய வந்தபோது ஒரே ஒரு பொத்தானை அழுத்தி எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டார்கள்.

(துரைசாமி வருகிறார்)

சித்ர: உம் பெயர் என்ன?

துரைசாமி: அட இழவே!

மாணிக்கம்: இழவு ஆயித்தானெ நீங்க இங்கே வந்திருப்பீங்க. பேரை மட்டும் சொல்லிடுங்க.

துரைசாமி: நான் செத்துப் போய் விட்டேனா?

சித்ர: பூவுலகில் அப்படித்தான் உம்முடைய இப்போதைய நிலைமையைக் குறிப்பது வழக்கம்.

துரைசாமி: அப்படியானால் நான் எப்படி இங்கே உயிரோடிருக்க முடியும்? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. இதோ பாரும் நீர் யாரோ எனக்கு தெரியாது. சாவுக்குப்பின் வேறொன்றும் இல்லை. சுவர்க்கம், நரகம் ஆகிய ஒன்றும் கிடையாது என்று நான் விஞ்ஞான சாஸ்திரபூர்வமாக நிரூபித்திருக்கிறேன். கடவுள் இல்லை என்று உமக்கே நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

சித்ர: நீர் சொல்வதில் எவ்வளவோ உண்மை இருக்கலாம். ஆனால் என் வேலையைச் செய்துதானே ஆக வேண்டும்.

துரைசாமி: இல்லை. இது உண்மை அல்ல. நான் கனாக்கண்டு கொண்டிருக்கிறேன். வாழ்வு பூராவும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்த சுவர்கத்திற்கா நான் வந்து சேர வேண்டும்? இது வைதீகர்களின் சூழ்ச்சி. இதை நான் நம்ப மாட்டேன்.

சித்ர: அதோ அப்படிகளைக் கடந்து சென்றால் உமக்கு உண்மை தெரிய வரும்.

துரைசாமி: நான் அப்படிகளைக் கடக்க மாட்டேன். சுவர்க்கம் வெறும் பொய் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். முதலில் நான் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதில் வேண்டும்.

சித்ர: எனக்கு இப்போது நேரமில்லை. நான் சொன்னாலும் உமக்கு அர்த்தமாகாது.

துரைசாமி: அப்படியானால் நான் போகமாட்டேன்.

சித்ர: சரி, உட்காரும்.

(துரைசாமி உட்காருகிறார்)

சுவாமிகள்: எனக்குத் தெரியும். இதுதான் நரகம். இல்லாட்டா நாஸ்திகர்கள் இங்கே வருவாளா?

மாணிக்கம்: அவர் கேக்கரதுலேயும் நியாயம் இருக்குபோலெ இருக்குது. இன்னும் கொஞ்சம் இருந்து பார்க்கலாம். இருங்கொ. படி தாண்டினாத்தான் சிரஞ்சீவி ஆச்சே.

(நீலாம்பாள் வருகிறாள்)

சித்ர: உன் பெயர் என்னம்மா?

நீலாம்பாள்: நீலாம்பாள், தாசி நீலாம்பாள். ஆண்களை மகிழ்விப்பதுதான் என் தொழில். என் தொழிலில் யாரும் என்மேல் குற்றம் கண்டுபிடித்தது இல்லை. நான் எப்பொழுதும்

யாரையும் ஏமாற்றியதில்லை. சாதி மத பேதமில்லாமல் எல்லோரையும் மகிழ்வித்தேன். அப்படியிருந்தும் பலர் என்னைத் திட்டுவது உண்டு. இதுதான் சுவர்க்கமா?

சித்ர: அப்படித்தான் பூவுலகில் இதைப்பற்றி சொல்லுகிறார்கள்.

நீலாம்பாள்: ஆஹா, என்ன அழகு, என்ன ஜோதி! வைகுந்த வாசனின் பாதார விந்தங்களை இவ்வளவு சுலபமாக அடைவேன் என்று நான் கனவிலும் கருதவில்லையே.

துரைசாமி: எல்லாம் பொய். வைதீகப் பெரட்டு ஒன்றையும் நம்பாதே. (சித்ர குப்தனைப் பார்த்து) உம்முடைய சாஸ்திரங்களும் நீதி நூல்களும் உண்மை என்றால் இவள் எப்படி சுவர்க்கத்துக்கு வரலாம்? பெரிய மகான்களும் தியாகிகளும் வரவேண்டிய இடத்திற்கு கேவலம் வாழ்வு பூராவும் உடலை விலைக்கு விற்றுப் பணம் சேர்த்தவள் வருவதா?

சித்ர: அந்தக் காரணத்தை அவளே சொல்லிவிட்டாளே. வாங்கிய பணத்திற்கு வஞ்சனை இல்லாமல் ஊழியம் செய்திருக்கிறாள். கலப்படமோ, கருப்புப் பணமோ அவளிடம் இல்லை. உங்களுடைய பூவுலக வித்தியாசங்களை நாங்களும் பின்பற்றி நடக்க வேண்டுமா? அங்கேயே நரகத்தை கண்டு விட்டாள் அவள். (நீலாம்பாளை பாத்து) அதோ அப்படிகளின் மேல் ஏறிப் போம்மா?

நீலாம்பாள்: தனியே போக பயமாயிருக்குதுங்களே? யாராவது கூட வந்தால்..’’

சித்ர: சரி கொஞ்சம் இரு, உனக்கு இஷ்டப்பட்டவர்கள் யாராவது வந்தால் போகலாம்.

(மைனர் சுந்தரம் வருகிறார்)

சித்ர: உங்கள் பெயர் என்ன?

மைனர்: மைனர் சுந்தரம். சுவர்க்கத்துக்கு இங்கெதான் டிக்கெட் போலெ இருக்குது.

துரைசாமி: இல்லை இது எல்லாம் சுத்தப்பொய்.

மைனர்: நீ சும்மா இரு ஐயா, இதோ உட்கார்ந்திருக்கிறாரே இவரைக் கேட்டால் தெரியும். ஏதுங்கோ, சுவர்க்கத்துக்கு இதுதானே வழி?

சித்ர: அப்படிகளின் மேல் ஏறிக் கதவுகளைத் திறந்துகொண்டு செல்ல வேண்டும்.

மைனர்: நிஜமாகவா?

சித்ர: ஆம்.

மைனர்: நான் சுவர்க்கத்துக்குப் போவேன் என்று கனவில்கூட நினைத்ததில்லை.

சித்ர: இங்கு வருபவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு புள்ளி நான்கு பேர் உம்மாதிரிதான் நினைத்துக்கொண்டு வருகிறார்கள். கம்ப்யூட்டரே கணக்கிட்டு சொல்லியிருக்கிறது.

மைனர்: என் நடத்தை ஒன்றும் அவ்வளவு நல்லது என்று சொல்ல முடியாதுங்கொ. என் காலத்தில் நானும் எவ்வளவோ செய்திருக்கிறேன். தகப்பனார் கொடுத்ததையெல்லாம் குடி, கூத்து, இவைகளிலேயே தீர்த்துட்டேன். இருக்கிறவரையிலும் சந்தோஷமா இருந்தேன். ஆனால் என் மனசார இன்னொருவரைப் பற்றி கெட்டது நினைச்சதில்லை. அதுதானுங்கோ முக்கியம்?

சித்ர: சரி, இனி போகலாம்.

மைனர்: என்ன, என்னை சுவர்க்கத்துக்கு அனுப்புவதனாலெ உங்க வேலைக்கு ஆபத்து வராதே? அப்படி ஏதாவது இருந்தால் சொல்லுங்கொ. என்னால் உங்களுக்கு ஏன் தொந்தரவு? நரகத்துக்கு போவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லீங்கொ. என் சினேகிதர் எல்லாம் அனேகமா அங்கெதான் இருப்பாங்கொ.

சித்ர: இங்கேயும் உம் சினேகிதர்களைப் பார்க்கலாம்.

(மைனர் படிகளுக்குப் பக்கமாகப் போகிறார்)

துரைசாமி: நில் நில் போகாதே. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நாம் இதைக் கண்டுபிடித்தே தீரவேண்டும்.

மைனர்: என்னய்யா இது. கள்ளுக்கடைக்குத்தான் மறியல், சுவர்க்கத்துக்குப் போகக்கூட மறியலா? (நீலாம்பாளைப் பார்த்து) யாரு நம்ம நீலாம்பாளா? நீ எப்போ வந்தாய்? சரி கொஞ்ச நேரம் இருந்துதான் பார்க்கலாமே.

(இந்திரா வருகிறாள்)

சித்ர: உன் பெயர் என்னம்மா?

இந்திரா: என் பெயர் இந்திரா, என்னைப் பார்க்க உங்களுக்கு ஒருவேளை ஆச்சரியமாய் இருக்கலாம். நான் யாருடனேயும் சொல்லிக்கொள்ளாமல் அவசரமாய் புறப்பட்டு வந்துவிட்டேன்.

மைனர்: அதென்னம்மா, உன் வயசிலே அவ்வளவு அவசரம்.

இந்திரா: மனோ லட்சியங்கள் முற்றுப் பெறா விட்டால் இருந்தென்ன? இறந்தென்ன? நான் ஒருவரை மனமாறக் காதலித்தேன். ஆனால் பெற்றோர் அதைக் கைகூடாமல் செய்துவிட்டனர். வேதனையைப் போக்கவோ மனம், நிம்மதி அடையவோ வேறு ஒரு வழியும் தோன்றவில்லை. ஆற்றில் குளிக்கப் போனவள் அப்படியே தண்ணீரில் முழுகி விட்டேன்.

மைனர்: ஐயோ பாவம்.

சித்ர: அதோ அப்படிகளின் மேல் ஏறிக் கதவுகளைத் திறந்துகொண்டு போம்மா.

இந்திரா: ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும். அவர் எப்போது வருவார்?

சித்ர: மற்றவர்கள் எப்போது வருவார்கள் என்பதைப் பற்றி நான் சொல்லக்கூடாது. கூடிய சீக்கிரம் வரலாம்.

இந்திரா: நான் இருக்கும் இடத்துக்குத்தானே வருவார்?

சித்ர: அதுவும் நான் சொல்லக்கூடாது.

மைனர்: சுவர்க்கத்திலே கருணை கொஞ்சம் கூட இல்லையோ?

துரைசாமி: தெரிந்தால் தானே சொல்வதற்கு.

இந்திரா: உலகத்தில் ஏன் எங்களை இவ்வளவு கஷ்டங்களுக்கும் வேதனைகளுக்கும் உட்படுத்துகிறீர்கள்.

துரைசாமி: சரியான கேள்வி.

சித்ர: ஏன், உனக்கு அதிக துன்பம் ஏற்பட்டதா?

இந்திரா: என்னைப்பற்றி மட்டும் நான் கேட்கவில்லை. மானிட வர்க்கத்துக்காகக் கேட்கிறேன். எத்தனை பஞ்சம். யுத்தங்கள், சண்டை, சச்சரவுகள்! எதற்காக இவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? இதற்கெல்லாம் என்ன முடிவு?

துரைசாமி: நீர் தானே இப்போது கடவுளின் பிரதி நிதியாக இங்கே உட்கார்ந்திருக்கிறீர்? மனித வர்க்கத்தின் பிரதிநிதிகளாக நாங்கள் நிற்கிறோம். எங்களுடைய கேள்விகளுக்கெல்லாம் தக்க பதில் சொல்லி ஆக வேண்டும். அல்லது இதெல்லாம் மனத்தை மயக்கி வஞ்சிக்கும் சூழ்ச்சி என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

சித்ர: நீங்கள் இறந்தும் உங்கள் மனிதத்தன்மையையும் பாசங்களையும் எண்ணங்களையும் இன்னும் விடவில்லை. கடவுள், சுவர்க்கம், நரகம், பாவம், புண்ணியம் என்று ஏற்படுத்திக் கொண்டு அவைகளெல்லாம் உண்மையா, பொய்யா என்று தெரிய வேண்டும் என்கிறீர்கள். பிரபஞ்சத்தின் அடிப்படையையும், உண்மையையும் உங்களுக்கு எப்படி எடுத்துச் சொல்வேன். அப்படிச் சொன்னால் தான் உங்களுடைய குறுகிய மானிட அறிவுக்கு எப்படி அர்த்தமாகும்?

துரைசாமி: அப்போது அவைகளெல்லாம் பொய் தானே?

சித்ர: உண்மை, பொய், என்னும் வார்த்தைகளின் அர்த்தம் உங்களுக்குத் தெரியுமா? நான் யார்? இங்கு இருப்பது உண்மையா, பொய்யா? இது தான் தெரியுமா? நான் உங்கள் மானிடக் கற்பனையின் மனோ உலகில் இருந்துதான் உங்களுக்கு காட்சி தருகிறேன்.

இந்திரா: பிரபஞ்ச உண்மையை அறிந்துகொள்ள நான் ஆசைப்படவில்லை. மானிட வர்க்கத்தின் துன்பங்களைப் போக்க ஒரு வழியில்லையா? என்றுதான் கேட்கிறேன்.

சித்ர: பிரபஞ்ச உண்மையை அறிந்தால்தான் துன்பங்கள் நீங்கும். சண்டைகள், பேதங்கள் ஒழியும். அவ்வுண்மையை அறிய உங்களால் இயன்றதை நீங்கள் செய்து விட்டீர்கள். இனி மற்றவர்கள் செய்யட்டும்.

துரைசாமி: அப்போது நீரே ஒரு கற்பனை, ஒரு பொய்.

சித்ர: உங்கள் வாழ்வின் கடைசியில் உங்களுடைய காரியங்களை சீர்தூக்கிப் பார்க்கும் மனச்சாட்சி நான். உங்களுக்கு வெளியில் இல்லை. உங்களுடைய மனதுக்குள்ளேதான் நானும் இருக்கிறேன். நீங்களும் நானும் ஒன்று.

இந்திரா: அப்போது எங்கள் ஆத்மாவுக்கு நிரந்தர வாழ்வு கிடையாதா? இதுதான் கடைசியா?

சித்ர: உங்கள் தனி ஆத்மாக்கள் மனித வர்க்கத்தின் ஒரு பாகம்; உங்களுக்கு இனிமேல் தனி அந்தஸ்து கிடையாது. அதுதான் சாவின் அர்த்தம். ஆனால் மனித வர்க்கத்தின் வாழ்வில் நீங்களும் வாழ்வீர்கள். இந்தப் படிகளும் கதவுகளும் உண்மையானவை அல்ல. உம் மனத்தில் கற்பனையின் பிம்பம். மனித வர்க்கத்துடன் இரண்டறக் கலப்பதின் குறி.

துரைசாமி: நான் இதுவரை சொன்னதுதான் சரி. அப்படி ஏறுவதில்லை என்று சொல்லிவிட்டால் என்ன செய்ய முடியும்? பிரபஞ்ச உண்மையை அறிந்தபிறகு தான் அதைத் தாண்ட வேண்டும்.

சித்ர: அது தெரிந்தால் அப்புறம் தாண்டவேண்டிய அவசியமே ஏற்படாமல் போகலாம். இனி நான் ஏதாவது சொன்னாலும் உங்களுடைய அறிவிற்கு எட்டாது. இனி எல்லோரும் மேலே போகலாம்.

(எல்லோரும் படிகள் ஏறிச் செல்லுகிறார்கள். இந்திரா துரைசாமியைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகிறாள்)

சித்ர: நீரும் சுவர்க்கத்தை அடைந்துவிட்டீர் என்று மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

துரைசாமி: அதெப்படி. நான்தான் படிகளைத் தாண்டவில்லை.

சித்ர: நீர் அவைகளைக் கடக்க வேண்டிய அவசியமில்லை.

துரைசாமி: இல்லை. நான் சுவர்க்கத்திற்குப் போக மாட்டேன். உலகில் கொடுமையும், வறுமையும், அநீதியும் இருக்கும்வரை நான் போராடியே தீருவேன்.

சித்ர: நீர் இப்போது சுவர்க்கத்தில் இருக்கிறீர்.

துரைசாமி: இங்கும் என் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவேன். ஜாக்கிரதை. மானிட சமூகத்தை ஒன்றுபடுத்தி வைதீகத்தின்மீதும் மூட நம்பிக்கைகள் மீதும் கடைசிப் போரை துவக்குவேன். உலகத்தில் எப்படி வெற்றி கண்டேனோ அதேபோல சுவர்க்கத்திலும் வெற்றி காண்பேன். நீங்கள் சிலர்; நாங்கள் கோடிக்கணக்கானவர்கள். எனது தோழர்கள்…..

சித்ர: மிஸ்டர் துரைசாமி! ஆண்டவன் ஆட்சி ஜனநாயக ஆட்சி அல்ல. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அவர் தேர்தலுக்கு நிற்கவேண்டியதில்லை.

(சித்திரகுப்தன் சிரிக்கிறார். மேடை மெதுவாக இருட்டடைகிறது)

---------------------------------------